**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை :- திரு. எஸ். விஜயகுமார், எம்.ஏ., எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2022ம் ஆண்டு ஜீன் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்குஎண்.489/2021**

**(CNR.No.TNVP02-001244-2021)**

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், சாலையாம்பாளையம் மதுரா ஓட்டேரிப்பாளையம் கிராமம், மாரியம்மன் கோவில் தெரு, நெ.147 என்கிற முகவரியில் வசிக்கும் இந்து, விவசாயம், சுமார் 55 வயதுள்ள பாஸ்கரன் மனைவி B. கோமதி.

... வாதி

/எதிர்/

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், சாலையாம்பாளையம் மதுரா ஓட்டேரிப்பாளையம் கிராமம், மாரியம்மன் கோவில் தெருவில் வசித்துவரும், இந்து விவசாயம் சுமார் 75 வயதுள்ள கோபால் குமாரர் வெங்கடேசன்.

... பிரதிவாதி

வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டு என விளம்புகை செய்து அந்த சொத்தில் பிரதிவாதியும் அவரது ஆட்களும் ஏஜெண்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும்பொருட்டு பிரதிவாதி பேரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும் பொருட்டும், வழக்கின் செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும் பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல்.

இத்தாவா 28.10.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவின் மதிப்பு ரூ.1,89,610/-க்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(b)-ன்படி

ரூ.2,845/- செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தாவா 15.05.1968, 17.02.1970, 19.07.2021 தேதியில் சமூகம் கோர்ட்டிலாகா விழுப்புரம் வட்டம், ஓட்டேரிபாளையம் கிராமத்தில் வியாஜ்ஜிய மூலம் உற்பத்தி.

இவ்வழக்கு 25.04.2022 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுந்தரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்பாணை

1. தாவாவில், வாதி கோரிய படி வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டு என விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது.

2. தாவா சொத்தில் பிரதிவாதியும் அவருடைய ஆட்களும் ஏஜென்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு அவர்கள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

3. தாவாவின் செலவுத் தொகை ரூ.7,774/- பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும்.

## செலவு பட்டியல் விவரம்

| செலவுப்பட்டியல் | வாதி தரப்பு ரூ. பை |
|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | 2,845.00 |
| வக்காலத்து | 10.00 |
| வழக்கறிஞர் ஊதியம் | 4,919.00 |
| **மொத்தம்** | **7,774.00** |

(வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

## சொத்து விவரம்

விழுப்புரம் ரீ.டி., வளவனூர் சப்ரி விழுப்புரம் வட்டம், சாலையாம்பாளையம் கிழக்கு கிராமத்தில்,

கி.ந.சர்வே.558/3 - 1.34.0 ெ*க்டேர் ஏக்கர் 3.31ல் மேற்படியூர் மதுரா ஓட்டேரிபாளையம் கிராமத்தில் பிள்ளையார் கோவில் வீதியில் மேற்படி வீதிக்கு (தெற்கு) வெங்கடேசன் மனைக்கு (கிழக்கு) ரங்கநாதன், பாவாடை, சங்கர், மனைக்கு (வடக்கு) ரங்கநாதன், பாவாடை, சங்கர், கருணாநிதி, பாலமுருகன் இவர்கள் மனைக்கும் (மேற்கு) இதன் மத்தியில் கி.மே.ஜாதியடி வடபுரம் 17.1/2 தென்புரம் 19.1/2 தெற்கு வடக்கு ஜாதியடி 153 இதற்கு சதுரடி 2830 (இதற்கு சதுர மீட்டர் 263) (இதற்கு நத்தம் நிலவரி திட்டத்தின் படி வழங்கப்பட்ட புதிய புல எண்.891/3 ஆகும்.

2022ம் ஆண்டு ஜீன் திங்கள் 09ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டுத்தரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.